வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3986/அ1/2020 நாள் 24.12.2020

---

பொருள் : வேலூர் மாவட்டம் – கல்வித் துறை – அலுவலக நிர்வாகம் – அலுவலகங்களில் அலுவலகப் பணிகள் மேற்கொள்ளுதல் – அலுவலகப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் நேரம் மற்றும் பயிற்சி அளிக்கும் இடம் மாற்றம் தெரிவித்தல் சார்பு.

பார்வை : சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34466/அ4/இ1/2020, நாள் 09.11.2020
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை கடிதம் நாள் 21/12/2020

---

பார்வை 2ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள அமைச்சுப் பணியாளர்களுக்கான பயிற்சி அட்டவணை இச்செயல்முறைகள் மூலம் மாற்றம் செய்து கீழ்க்காணும் புதிய அட்டவணையின்படி நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

வேலூர் வருவாய் மாவட்டத்திலுள்ள முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர்கள் / ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி பணியாளர்கள் / மாவட்டக் கல்வி அலுவலகப் பணியாளர்கள் / வட்டாரக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அரசு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி பணியாளர்கள் / மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலக பணியாளர்கள் மற்றும் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர்கள் ஆகியோருக்கு அலுவலகம் நடைமுறை சார்பான பயிற்சி கீழ்க்காணும் அட்டவணையின்படி நடைபெறவுள்ளது.

| நாள் | பணியாளர்கள் | இடம் |
|---|---|---|
| **29.12.2020** மற்றும் **30.12.2020** (இரண்டு நாட்கள்) | CEO, DEO, BEO, SSA, DIPE (அலுவலக பணியாளர்கள் அனைவரும்) | அன்னை மீரா பொறியியல் கல்லூரி, பூட்டுத்தாக்கு<br>காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| | அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் இளநிலை உதவியாளர் / உதவியாளர் மட்டும் | |
| | அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் ஆய்வக உதவியாளர் / பதிவுறு எழுத்தர் மட்டும் | |

மேற்கண்ட பயிற்சி நடைப்பெறும் நாட்களில் அலுவலகப் பணியாளர்கள் எவரும் விடுப்பு ஏதும் துாய்க்காமல் கலந்துக் கொண்டு பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி பயிற்சியில் அலுவலகப்பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர், ஆய்வக உதவியாளர், பதிவுறு உதவியாளர் மற்றும் பதிவுறு எழுத்தர் தவறாமல் கலந்துக் கொள்ள ஏதுவாக விடுவித்து அனுப்புமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலுார்.

பெறுநர்

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்விஅலுவலகம் காட்பாடி வேலுார்
2. மாவட்டக் கல்வி அலுவலர், வேலுார்.
3. அனைத்து வகை அரசு / அரசு நிதியுதவிபெறும் உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
4. வேலுார் வருவாய் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்